அலகு – 1

வேத உபநிடதங்கள்

வேதம் 'வித்' என்னும் வடமொழிச் சொல்லடியில் இருந்து தோன்றியது. 'வித்' என்ற வடமொழிச் சொல்லுக்கு அறிதல் என்பது கருத்து. எனவே, வேதங்கள் என்ற சொல்லுக்கு அறிவு நூல்கள் என்பது பொருளாகின்றது. வேதங்கள் அறிவு நூல்களாயின் எதைப் பற்றிய அறிவு என்ற வினா இயல்பு.

அறிதல் இரண்டு வகை உண்டு. மனிதன் தன் வாழ்க்கையை இனிதாக்குவதற்கு உலகிலுள்ள பொருள்களை எவ்வெவ்விதமாகப் பயன்படுத்தலாம் என்பதை அறிவது ஒரு வகை அறிவு. இந்த வாழ்க்கையும் இந்த உலகமும் எதற்காக என்பதை அறிவதே இரண்டாவது வகை அறிவு. இந்த இரண்டாவது வகை அறிவின் வழியே தத்துவ ஞானம் எனப்படுவது. இந்த உலகம் எதிலிருந்து, எங்ஙனம், எதற்காக உற்பத்தியானது என்பதை ஆராய்கிறது. ஆகவே இந்த இரண்டாவது வகை அறிவே அடிப்படையானது. இந்த அடிப்படை அறிவை நமக்குத் தருவன என்ற காரணத்தால்தான், அறிவு நூல் என்ற பெயர் வேதங்களுக்கு ஏற்பட்டது.

வேதங்களின் சிறப்பு

வேதங்கள் அடிப்படை அறிவைத் தருவதனால்தான் அவற்றிற்கு அப்பெயர் ஏற்பட்டது. அடிப்படை பற்றி அறிய வேண்டியவை அனைத்தும் அங்கு கூறப்பட்டுள்ளன. இந்தியத் தத்துவ ஞானமனைத்திற்கும் சமய அறிவு அனைத்திற்கும் மூலம் என்பது மட்டுமல்ல வேதங்களின் சிறப்பு. உலகம், ஆன்மா, இறைவன் ஆகியவை பற்றி முதன்முதல் சிந்தித்த மனிதன் என்னென்ன கருத்துக்களைக் கொண்டிருந்தான் என்பதை அறிய வேண்டுமாயினும் வேதங்களைத்தான் நாட வேண்டும். வேத காலத்திலோ அல்லது அதற்கு முற்பட்ட காலத்திலோ ஆக்கப்பட்ட வேறு நூல் எதுவும் கிடையாது. எனவே இந்திய மக்களை மட்டுமன்றி மனிதகுலம் முழுவதையுமே எடுத்துக் கொண்டாலும் கூட மனித வர்க்கத்தின் முதற்சிந்தனைகளைக் கூறும் முதனூல் என்ற சிறப்பும் வேதங்களுக்கே உரியது எனவும் சொல்லலாம். இன்று உலகில் வழக்கில் உள்ள கலாச்சாரங்கள் யாவற்றினும் எங்ஙனம் இந்தியக் கலாச்சாரமே மிகப்பழையதோ அங்ஙனமே அக்கலாச்சாரத்தின் மூல இலக்கியமாகிய வேதங்கள் இன்று வழக்கிலுள்ள உலக இலக்கியங்கள் எல்லாவற்றிலும் மிகப் பழையனவாகும்.

வேதங்களின் காலம்

வேதம் மிகப்பழையது எனின் எவ்வளவு பழையது, அது ஆக்கப்பட்ட காலம் எது? என்ற வினாக்கள் எழுவது இயல்பு. கௌதமபுத்தர் தமது காலத்தில் வழக்கத்திலிருந்த வேதங்களை எதிர்த்தே தமது மதத்தைத் தாபிக்கத் தொடங்கினார். ஆகையால் வேதங்கள் புத்தருக்கு முற்பட்டன என்பது நிச்சயம். புத்தர் கி.மு ஆறாம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர். ஆகையால் வேதங்கள்

குறைந்தபட்சம் புத்தருக்கு 2500 ஆண்டுக்கு முற்பட்டன. எனவே வேதங்கள் கி.மு 8000 ஆண்டுகளுக்கு முற்பட்டன.

வேதங்களை ஆக்கியோன்

வேதங்கள் மனிதர் எவராலும் ஆக்கப்பட்டன அல்ல. அதனால் வேதங்களுக்கு அபௌருஷேயம் என்றொரு பெயர் எனக் கூறுகின்றனர். இங்கு புருஷன் என்ற சொல்லுக்கு மனிதன் என்பதே கருத்து. வேதங்கள் எவராலும் எழுதப்படாதவை என்ற கருத்துப்பட அவற்றை எழுதாமறை எனக்குறிப்பிடும் வழக்கமும் உண்டு. மறை என்ற சொல்லுக்கு மறைத்து வைக்கப்பட வேண்டிய நூல் என்பது பொருளல்ல. மறைந்திருக்கும் பரம்பொருளை விளக்கும் நூல் என்பதுதான் அதன் கருத்து. வேதங்களுக்குச் சுருதி என்றொரு பெயரும் உண்டு. சுருதி என்ற சொல்லுக்குக் காதால் கேட்பது என்பது கருத்து. ஆதியில் வேதங்கள் எழுதி வைக்கப்படாமல் இந்த காலத்தில் குரு-சீட முறையில் ஒருவர் சொல்ல மற்றவர் அதனைக் கேட்டு மனனம் செய்து கர்ணபரம்பரையாகவே பல நூற்றாண்டுகள் பாதுகாக்கப்பட்டமையால் சுருதி என்ற பெயர் ஏற்படலாயிற்று. எனவே வேதங்கள் குறிப்பிட்ட ஒருவரால்/குறிப்பிட்ட ஒரு காலத்தில் எழுதப்பட்டவையல்ல என்பது தெளிவு.

வேதநெறியும் தமிழ்நெறியும்

ரிக் வேதத்திலே முதன்மையானவர்களாக இந்திரனும் வருணனுமே பேசப்பட்டுள்ளனர். தமிழின் மிகப்பழைய நூலாகக் கிடைக்கப்பெற்றுள்ள தொல்காப்பியத்தில் "வேந்தன் மேய தீம்புனல் உலகமும் வருணன் மேய பெருமணல் உலகமும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா ஊரெடுத்த காதை இடம் பெற்றிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. தமிழருள் பெரும்பகுதியினர் சைவர். ரிக் வேதத்தில் சிவன் என்ற சொல்லும் நீலகண்டன் என்ற சொல்லும் இடம்பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களுள் மிக முதன்மையான இலக்கியமாகிய புறநானூற்றில் 'நீலமணி மிடற்று ஒருவன்' என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. இவற்றை நோக்குமிடத்து ஆரியர் இந்திய நாட்டிற்குள் வருவதற்கு முன்பு இந்தியாவில் நிலவிய கருத்துக்கள் வேதங்களில் இடம்பெற்றுள்ளன எனக்கூறலாம்.

வேதங்களின் உட்பிரிவுகள்

ரிக், யசுர், சாம, அதர்வணம் என்ற பெயர்களை உடைய நால் வேதங்களும் மந்திரப் பகுதி, பிராமணப் பகுதி என்ற இரண்டு பிரிவுகளை உடையன. பிராமணப் பகுதியிலே உபநிடதம் என்ற மேலும் ஒரு பகுதி உண்டு. மந்திரம், பிராமணம், உபநிடதம் ஆகிய மூன்றையும் சேர்த்தே வேதம் என்று வழங்கும் மரபு உண்டாயிற்று. இவற்றில் மந்திரங்கள் தெய்வங்களை நோக்கிக் கூறப்படும் துதிப்பாடல்கள். மந்திரம் என்ற சொல்லுக்கு உச்சரிப்பவரைக் காப்பாற்றும் சொல் என்பது கருத்து. எனவே மந்திரங்கள் யார் யார் தங்களை உச்சரிக்கின்றனரோ அல்லது யார் பொருட்டு அவை உச்சரிக்கப்படுகின்றனவோ அவர்கள் எல்லோரையும் காப்பாற்றுவன என்று பொருளாகின்றது.

பிராமணங்கள் உபநிடதங்கள்

மந்திரங்களை யாம் உச்சரிக்கும்போது அனுட்டிக்க வேண்டிய செய்கைகளை விவரிப்பனவே பிராமணங்கள். மந்திரங்கள், பிராமணங்கள் இவை இரண்டையும் ஒட்டியெழும் தத்துவங்களை ஆராய்வனவே உபநிடதங்கள். இவை மூன்றும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையவை. பிராமணங்களுக்கும் உபநிடதங்களுக்கும் இடையில் ஆரண்யம் என்றொரு பகுதியும் உண்டு. ஆரண்யம் என்றால் காடு. இல்லறத்தானாக வாழ்ந்து கிரியைகளை அனுட்டித்த ஒருவன் துறவறத்தை மேற்கொண்டு ஆரண்யத்திலே வாழ நேரிடின் கிரியைகளை அனுட்டிப்பதற்கு அவசியத்துக்குக் கிட்டியுள்ள வசதிகளும் பொருட்களும் காட்டிலே கிடைக்கப்பெறா. அப்போது அவன் அடையாளங்கள் மூலமோ, மானசீக முறையாலோதான் தன் அனுட்டானங்களை மேற்கொள்ள முடியும். அத்தகைய நிலையில் மேற்கொள்ள வேண்டியவற்றை விவரிப்பனவே ஆரணியங்கள். மந்திரங்கள் புலவர்களாலும், பிராமணங்கள் புரோகிதர்களாலும் உபநிடதங்கள் தத்துவஞானிகளாலும் ஆக்கப்பட்டிருக்கக் கூடும் என்பது அறிஞர்கள் கருத்து. மந்திரங்களிலே காணப்படும் கருத்துக்களின் தொடர்ச்சியாகவும் பிராமணங்களில் கூறப்படுவனவற்றுக்கு மறுப்பாகவும் எழுந்தவையே உபநிடதங்கள்.

வேதங்களிலே பேசப்படும் விசயம்

இயற்கையின் பகுதிகளாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றைத் தெய்வங்களாக்கி அவற்றுக்குச் செலுத்தும் வழிபாடுகளாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. மின்னல், முழக்கம், முகில், மழை, கடல் இவைகளைத் தெய்வங்களே இயக்குகின்றன என ஆதிமனிதன் கருதினான். தனக்கு எவ்விதக் கேடும் செய்ய வேண்டாம் எனத் தெய்வங்களை வேண்டி வழிபட்டான். தனக்குக் கேடு இல்லாமையும் நன்மைகள் கிடைக்கவும் தன்னாலியன்ற பொருள்களைக் கைமாறாக வழங்குவதாகவும் கூறினான். மற்ற தெய்வங்களுக்கு மனிதன் கொடுக்கும் பொருள்களை அவைகளிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதே அக்கினியின் கடமையாகக் கருதப்பட்டது. அதனாலேதான் தெய்வங்களுக்குச் சேர வேண்டிய பொருள்களை அக்கினியில் இடும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. ஒழுக்கத்திற்குரிய தெய்வம் வருணன். வருணன் மனிதனுடைய செயல்களை எவ்வளவு தூரம் கவனிக்கிறான் என்பதை உணர்த்துவதற்காகப் போலும் சூரியனையே வருணனுடைய கண்ணாக வேதம் பல இடங்களில் பதிவு செய்துள்ளது.

தெய்வப் பிரிவுகள்

தெய்வங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொரு பிரிவும் பதினொன்று கொண்ட மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம். வானுக்குரியவை ஒரு பிரிவு. வருணன், மித்திரன் இப்பிரிவுக்குரிய கடவுளர்கள். மண்ணுக்குரியவை ஒரு பிரிவு. இப்பிரிவுக்குரிய கடவுள் அக்கினி. வாயு மண்டலத்துக்குரியவை மூன்றாவது பிரிவு. இந்திரன், வாயு ஆகியவை இப்பிரிவுக்குரிய கடவுளர்கள்.

மூல காரணம் 4.

நமது சாதாரண காட்சிக்குப் புலனாகும் நிலம், நீர், நெருப்பு போன்றவற்றோடு இந்த உலகம் முடிந்துவிடவில்லை. இவற்றின்

தோற்றங்கள் நமது சாதாரண காட்சிக்குப் புலனாகாதவை. எனவே காணப்படும் இந்த உலகம் காணப்படாத மூலப் பொருளிலிருந்தே உற்பத்தியாகின்றது. இந்தப் பேருண்மை ஒன்றைத்தான் ஒவ்வொன்றுக்கும் காரணம் ஒரு தெய்வமே என்றதன் மூலம் இவ்வேத மந்திரங்கள் குறிப்பாக உணர்த்துகின்றன.

காரண காரியத் தொடர்பு

இந்த உலகில் நிகழும் ஒவ்வொரு சம்பவத்துக்கும் ஒவ்வொரு காரணமுண்டு என்ற நம்பிக்கையிலிருந்தே இக்கருத்துகள் தோன்றின என்பது புலனாகின்றது. இந்தக் காரண காரியத் தொடர்பை உணர்வதும் குறிப்பதும் தத்துவ ஆராய்ச்சியின் அடிப்படைகளுள் முக்கியமானது.

ஒழுங்கும் ஒழுக்கமும்

இயற்கை நிகழ்ச்சிகளில் ஒரு நியதியும் ஓர் ஒழுங்கும் உண்டு என்பதை உணர்ந்தமையால்தான் ஒழுங்கைக் குறிப்பதற்கு 'ருதம்' என்று ஒரு சொல் வழங்கப்படுகின்றது. இயற்கை நியதிக்கு தெய்வ நீதியும் மனித ஒழுக்கமுமே அடிப்படையாகின்றது. நியதிகளைக் கண்காணிப்பது மட்டுமல்ல. வருணனுடைய கடமை. மனிதனுடைய ஒழுக்கத்தைக் கவனிப்பதும் அவனே. பிற்காலத்தில் தத்துவ தரிசனங்களில் விவரிக்கப்படும் தர்மம், அதர்மம், நல்வினை, தீவினை, முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகிய யாவற்றுக்கும் மூலம் இந்த 'ருதம்' என்பது வெளிப்படை.

ஒரு தெய்வ வாதம்

வேதங்களிலே பல தெய்வங்கள் பேசப்படுகின்றன என மேலே குறிப்பிட்டோம். பல தெய்வ வழிபாடு ஆங்கிலத்தில் பொலி தீயிசம் Polytheism எனப்படும். ஆனால் இப்பல தெய்வ வழிபாடு வேதங்களிலே காலத்தால் முற்பட்ட மந்திரங்களிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றது. படிப்படியாக இக்கொள்கை மாறி இதற்குப் பதிலாக ஒரே ஒரு தெய்வமே முழுமுதற் தெய்வம் அதுவே வழிபாட்டுக்கு உரியது என்ற கொள்கை வலுப்பெறுவதைக் காண்கிறோம். விஸ்வகர்மன், பிரஜாபதி எனத் தெய்வத்துக்கு இடப்பட்ட பெயர்களாம். விஸ்வகர்மன் என்பதற்கு எல்லாவற்றையும் செய்ய வல்லவன் என்பதாகும். விஸ்வகர்மன் எல்லாப் பக்கமும் கண்களும் முகங்களும் கைகளுமே உள்ளவன் என வருணிக்கப்படுகின்றனன். இந்த ஒரு தெய்வக் கொள்கையே பிரஜாபதி என்ற பெயராலும் வற்புறுத்தப்படுகின்றது. விஸ்வகர்மன், பிரஜாபதி ஆகிய இருபெயர்களும் குறிப்பது ஒரு தெய்வத்தைத்தான். பிரஜாபதி என்ற சொல்லுக்குப் பிரஜைகளின் தலைவன் என்பது பொருளாகும்.

ஒருமை வாதம்

'பொலிதீயிசம்' எனப்படும் பல தெய்வ வாதம் படிப்படியாக 'மொனோதீயிசம்' எனப்படும் ஒரு தெய்வ வாதமாக மாறிப் பின் மொனிசம் எனப்படும் ஒரு தெய்வ எனப்படும் ஒருமை வாதமாக மாறிய கருத்து வளர்ச்சியை வேதங்களிலே காண்கிறோம்.

ஆன்மா

ஒவ்வோர் உடலினுள்ளும் ஒவ்வோர் ஆன்மா உண்டு. நமது கண்ணுக்குப் புலனாகாவிடினும் அத்தகைய ஆன்மாக்கள் உள்ளன என்பது நிச்சயம். அவை நித்தியமானவை, உடல் அழியும்போது ஆன்மா அழிவதில்லை

உடல் அழிந்தபின் ஆன்மாவுக்கு என்ன நிகழ்கிறது? எனின், ஒருவன் இறந்ததும் அவனது ஆன்மா அவன் செய்த நல்வினை, தீவினைகளுக்கேற்ப சொர்க்க லோகத்துக்கோ அல்லது நரக லோகத்துக்கோ செல்லும் என்னும் கருத்தைத்தான் வேதங்கள் சொல்கின்றன. மறுபிறப்பு பற்றிய கொள்கை முழுமையாகச் சொல்லப்படவில்லை. அடிப்படை செய்தி மட்டுமே உள்ளது.

உலகம்

உலகம் உண்மை என்பதுதான் வேதங்களிலே காணப்படும் கருத்து. உலகம் உண்மையல்ல என்ற கருத்து வெளிப்படையாக இடம்பெறவில்லை. தண்ணீர்தான் மூலப் பொருள். அதிலிருந்துதான் ஒன்றிலிருந்து ஒன்றாக ஏனைய பஞ்ச பூதங்களும் அவற்றாலாகிய இந்த உலகமும் உற்பத்தியாயின என்ற கருத்தை வேதங்களிலே காண்கிறோம். அறிவுடைய ஒருவனே இந்த உலக உற்பத்திக்குக் காரணமானவன் என்பதும் வேதங்களின் கருத்து. ஆனால் அறிவுடைய அவன் அறிவற்ற ஜடப்பொருளாகிய இந்த உலகை எதிலிருந்து உற்பத்தி செய்தான். தன்னிடத்திலிருந்தே உற்பத்தி செய்தானா என்ற வினாவுக்கு தன்னிடத்திலிருந்து உற்பத்தி செய்தான். புறம்பான ஒரு பொருளிலிருந்து உற்பத்தி செய்தான் என்ற இரண்டு கருத்துக்களும் வேதங்களிலே இடம் பெற்றுள்ளது.

மனித ஒழுக்கம்

இறைவன், ஆன்மா ஆகிய இவைகளைப் பற்றி ஒருவன் எத்தகைய கருத்துக்களை உடையவனாகின்றானோ அதற்கு ஏற்பவே அவனிடம் ஒழுக்கமும் அமையும். ஒழுக்கத்தை பாதுகாப்பதே வருணன் எனும் தெய்வத்தின் கடமை. தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு ஐம்புலத்தாறை ஓம்புவதே ஒருவனின் கடமை என்கிறது திருக்குறள். சூதாடல், பிறன்மனை விழைதல், பொய் பேசுதல் இவற்றைப் பெரும் பாவங்களாக வேதங்கள் கண்டிக்கின்றன.

பிரஸ்தானத் திரயம்

இந்து சமயத்திற்கும் இந்தியத் தத்துவ ஞானத்துக்கும் ஆதார-மான மூலநூல்கள் மூன்று. அவை உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை ஆகிய மூன்று நூல்களுமே பிரஸ்தானத் திரயம் என்றழைக்கப்படுகிறது.

உபநிடதங்கள்

உபநிடதம் என்ற வடமொழிச் சொற்களுக்குச் சிரத்தையோடு மிகச் சமீபத்தில் இருத்தல் என்பதே நேர் கருத்து. குருவுக்கு மிகச் சமீபத்தில் சிரத்தையோடு உட்கார்ந்து சீடனுக்கு குரு உபதேசித்த உபதேச மொழிகளே உபநிடதங்களாகும். குருவுக்கும் சீடனுக்கும் இடையில் நடந்த உரையாடல்களே பெரும்பாலும் உரையாடல் வடிவத்திலேயே அமைந்தவை. பற்பல சமயங்களில் பற்பல முனிவர்கள் தங்களை அணுகிய சீடர்கள் வினாவிய வினாக்களுக்கு அளித்த விடைகள் யாவும் உபநிடதங்களில் இடம் பெற்றுள்ளன.

உபநிடதங்கள் அனைத்தையும் பல்வேறு ஆசிரியர்கள் பல்வேறு சூழல்களில் எழுதி இருப்பதால் கூறப்பட்ட செய்திகளில் தொடர்ச்சியோ ஒழுங்கோ இல்லை. ஒரு விஷயத்தைப் பற்றியே ஒரு முனிவர் ஒரு

விதமாகவும், வேறொரு முனிவர் வேறொரு விதமாகவும் கூறியிருக்கவும் காண்கிறோம்.

தொகையும் காலமும்

இருநூற்றுக்கும் மேற்பட்ட உபநிடதங்கள் உள்ளன. அவற்றுள் நூற்றெட்டு உபநிடதங்கள் பிரதானமானவை. அவற்றுள்ளும் பத்து உபநிடதங்களே அடிப்படையானவை. இவற்றுள் பெரும்பாலானவை புத்தரது காலத்திற்கு முன்பே ஆக்கப்பட்டவை.

உபநிடதங்களை ஆக்கியோர்

உபநிடதங்களை ஆக்கியோர் முனிவர்கள். இவர்கள் தெய்வ அருள் பெற்றவர்கள், தாங்கள் கூறுவனவற்றை அனுபவ வாயிலாகக் கண்டவர்கள் என்று கருதத் தக்கவர்கள். அதனால் அவர்கள் கூறிய கருத்துக்கள் இருக்கின்றன. அவர்களைப் பற்றிய விபரங்கள் அதிகம் கிடைக்கப்பெறவில்லை

உபநிடத உரையாடல்கள்

குருவுக்கும் சீடனுக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடல்களே உபநிடதங்களாய் அமைந்துள்ளன. உபநிடதங்களிலே காணப்படும் குரு சீடர்கள் பல திறப்படுவர். சில இடங்களில் மனைவி சீடராகவும் கணவனே குருவாகவும் அமைவதைக் காண்கிறோம். சில இடங்களில் மகன் சீடன். தந்தை குரு. சில இடங்களில் யமன் குரு அவனிடம் செல்லும் சிறுவனே சீடனாகவும் அமைவதைக் காண்கிறோம். மைத்திரேயியும் யாக்ஞவல்கியரும் உரையாடிய உரையாடல் முக்கியத்துவம் வாய்ந்தது.

யாக்ஞவல்கியர் இல்லறத்தை முடித்துவிட்டுத் துறவறத்தை மேற்கொள்ளப் புறப்பட்டபோது, மைத்ரேயி பகவானே, சகல சம்பத்துக்களையும் நீர் எனக்குத் தந்தாலும் அதைக் கொண்டு நான் இறவாமை அடைவேனா என்றார். முக்தி தராத இந்த செல்வத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன். தாங்கள் வனம் புகுமுன் எனக்கு மெய்ஞானத்தை உபதேசித்து அருள்வீராக என்றார். அப்போது யாக்ஞவல்கியர் கூறிய மொழிகளே பிருகதாரண்ய உபநிடதம்.

நாரதரும் சனத்குமாரரும்

நாரத முனிவர் சனத்குமாரரிடம் சென்று, எனக்கு நால் வேதங்களும் தெரியும். இதிகாச புராணங்கள் அறிவேன். கணிதம், சோதிடம், கால அளவு, சாஸ்திரம், வியாகரணம், காவியம், யாப்பியல், அலங்காரம், பூதநூல்கள், ஆயுதநூல்கள், யான சாஸ்திரம், நாட்டியம், சங்கீதம் முதலிய கலைகளும் கற்றிருக்கிறேன். ஆனால் ஆத்ம ஞானம் அடைந்தால்தான் துக்கம் தீரும். எனக்கு ஞானம் அருள்வீராக என்று கேட்டதின் விளைவாக ஞானம் உபதேசிக்கப்பட்டது.

நசிகேதனும் யமனும்

நசிகேதன் ஆத்மா எத்தகைய பொருள். அது தேகத்துக்குள் எவ்வாறு மறைந்து நிற்கிறது. உடலுக்கும் ஆன்மாவுக்கும் என்ன உறவு? என்று வினவ யமன் உரைத்த பதிலாகவே கடோபநிடதம் அருளப்பட்டது.

இந்திரனும் பிரஜாபதியும்

இந்திரனும், விரோசனனும், பிரஜாபதியும் சென்று வணங்கி, மூப்பு, மரணம், சோகம், பசி, தாகம் இவைகளில் யாது தீண்டாத ஆத்மா என்ற ஒன்று உண்டென்றும் அதனை அறிய விரும்புவதாகக் கேட்க ஞானம் அருளப்பட்டது.

உடலை இயக்கும் சக்தி

படுக்கையிலே இருக்கும் உடலை எழுந்து உட்காரச் செய்வதும் உட்கார்ந்திருக்கும் உடலை எழுந்து நடக்கச் செய்வதும் உடலினுள்ளே இருக்கும் ஒரு சக்தியேயாகும். அந்த சக்தியே ஆத்மாவாகும்.

உலகை இயக்கும் சக்தி

இந்த உடலைப் போலவே உலகமும் இயங்குகின்றது. தீக்குச் சுடும் இயல்பு. நீருக்குக் குளிரச் செய்யும் இயல்பு ஆகியவற்றை அளிப்பது ஒரு சக்தி. பூமியைச் சுழலச் செய்வதும் சக்தி. பூமியைச் சுழலச் செய்வதும் ஒரு சக்தி. பூமியின் மேலுள்ள மரம் செடி கொடி யாவும் பூப்பதும் காய்ப்பதும் அச்சக்தியினாலேயே. அச்சக்திதான் பிரம்மம். வான் அப்பிரம்மத்தின் தலை. சூரிய சந்திரர்கள் அதனுடைய கண்கள். திக்குகள் அதன் செவிகள். வேதம் அதனுடைய வாக்கு. காற்று அதனுடைய மூச்சு என்று உபநிடதம் வருணிக்கிறது.

பிரம்மம் என்பது 'பிரஹ்' என்னும் வினையடியாகப் பிறந்தது. 'பிரஹ்' என்பதற்கு வளர் என்பது கருத்து. பிரம்மம் தன்னிலிருந்து இந்த உலகம் முழுவதும் வளர்தற்கு மூலமாயுள்ளது.

தடையும், மகா வாக்கியங்கள் மூலம் விடையும்

நமக்குள் ஆத்மா என்ற ஒன்று உண்டு என்பதை நாம் ஒப்புக் கொள்ளலாம். அதிலிருந்து இந்தப் பிரபஞ்சத்திற்கும் ஓர் ஆத்மா இருந்தாக வேண்டும். அவை மிக முக்கியமானவை. அவற்றுள் தத்வமஸி என்பது ஒன்று. நீதான் அது என்பது அதன் கருத்து.

சட உலகுக்கும் சித்துதான் மூலம்

இச்சடப் பிரபஞ்சம் அனைத்துக்கும் மூலம் சடமல்ல. சித்து என்பதே ஆகும். ஆத்மா சடப்பொருள் அல்ல. சடமல்லாத ஒன்றே. மனித உடல்கள் உட்பட. இச்சடவுலகமனைத்தும் பிரம்மத்துள் ஒடுங்கும். ஏனெனில் அதனிடத்திலிருந்தே அவை யாவும் உற்பத்தியாகின்றது. பிரபஞ்சம் அனைத்தும் பிரம்மத்துள் ஒடுக்கம். ஆத்மாக்கள் கூட அந்தப் பிரம்மந்தான். ஆகையால் அடிப்படையாக உள்ளது ஒரே ஒரு வஸ்துவே என இவ்வாறு வாதிப்பதற்குப் (Monism) ஒருமை வாதம் என்று பெயர். உடலுக்கு உயிர் போல உலகுக்குப் பிரம்மம். பிரம்மத்திலிருந்தே உலகம் உற்பத்தியாகின்றது.

பிரம்மத்தின் நிலைகள்

உபநிடதங்களிலே பிரம்மத்துக்கு இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன. ஒன்று பிரம்மம் உலகத்தோடு கூடி, உலகம் எங்கணும் வியாபித்திருக்கும் நிலை. இது சப்பிரபஞ்ச நிலை எனப்படும். அதாவது சக பிரபஞ்சம். பிரபஞ்சம் உலகோடு கூடியது. இங்கு பிரம்மம் தஜ்ஜலான் என்ற பெயரால் குறிப்பிடப்படுகின்றது. தஜ்ஜலான் என்ற சொல்லுக்குத் தோன்றுவதற்கும், நிலைபெறுவதற்கும், பின்னர் ஒடுங்குவதற்கும் காரணமாக உள்ளது என்பது இதன் கருத்து. இந்த உலகம் எதிலிருந்து தோன்றி, பின்னர் எதனால் நிலைபெற்றது, ஈற்றில் எதனுள் போய் ஒடுங்குகிறதோ அதுவே பிரம்மம்.

நிஷ்பிரபஞ்சம்

பிரம்மம் இந்த உலகம் எங்கும் வியாபித்துள்ளது எனக் கூறும்போது இந்த உலகந்தான் பிரம்மம். இந்த உலகத்துள் பிரம்மம் அடங்கிவிடும். எனவே இயற்கைதான் பிரம்மம். பிரம்மத்திற்கு உலகத்தைக் கடந்த ஒரு நிலையும் கூறப்படுகின்றது. அதுவே நாம் குறிப்பிட்ட இரண்டாவது நிலை. அது நிஷ்பிரபஞ்சம் எனப்படும். நிஷ்பிரபஞ்சம் என்பதற்குப் பிரபஞ்சம் அற்ற என்பது பொருளாகும். இறைவன் இயற்கையுமாகி அப்பாலுமானவன் என்ற உண்மையை இருநிலைகளும் சேர்ந்து உணர்த்துகின்றன.

ஆத்மாவின் கோசங்கள்

ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல கவசங்களால் மூடப்பட்டது போல ஆத்மா மூடப்பட்டிருப்பதாகக் கூறும் ஒரு குறிப்பைத் தைத்திரிய உபநிடதத்திலே காண்கிறோம். எல்லாவற்றுக்கும் புறத்தேயுள்ள கவசமே இந்த உடம்பு. அது அன்னத்தால் அதாவது உணவினால் ஆனது. அதற்கு அன்னமய கோசம் என்று பெயர். கோசம் என்ற சொல்லுக்கு உறை என்பது கருத்து. அதற்குள் அதைவிட நுட்பமாக உள்ளது பிராணமய கோசம். இதுவே ஜீவ சக்தி. இதற்குள்ளே உள்ளது மனோமய கோசம். இதற்குள்ளே உள்ளது விஞ்ஞானமய கோசம். அது அறிவால் ஆயது. இதற்குமுள்ளே உள்ளது ஆனந்தமய கோசம். ஒன்றனுள் ஒன்றாக இத்தனை உறைகளால் மூடப்பட்டு இவற்றுக்கு நடுவே உள்ளதே ஆத்மா.

இருவகை முக்திகள்

பந்தத்திலிருந்து நீங்கிய நிலையே முக்தி. இருவகை முக்திகள் பேசப்படுகின்றன. ஒன்று விதேக முக்தி, அதாவது தேகம் நீங்கிய பிற்பாடு ஏற்படுவது. மற்றது ஜீவன் முக்தி. அது இந்த உடலோடு இருக்கும்போதே பெறக் கூடியது.

முக்தியை அடைவதற்கு வழிகள் : வைராக்கியம்

முக்தியைப் பெறுவதற்கு வைராக்கியமும் ஞானமுமே முக்கியமானவை. வைராக்கியம் என்பது பற்றறுத்தல். இது அகங்காரத்தை நீக்குவதன் மூலமே கைகூடும். பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம் முதலிய வாழ்க்கைப் படிகளை முறையாகக் கடப்பதன் மூலமே அகங்காரத்தை நீக்கிப் பற்றற்ற நிலையை அடையலாம்.

ஞானம்

ஞானத்துக்கு மூன்று வழிகள் கூறப்பட்டுள்ளன. சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்பவை அவை. சிரவணம் என்பது தக்க குருவின் மூலம் உபநிடதங்களைக் கற்றல். மனனம் என்பது கற்றவற்றைச் சிந்தித்தல். நிதித்தியாசனம் என்பது அவற்றைத் தியானித்தல்.

பகவத் கீதை

மகாபாரதப் போரிலே துரியோதனாதியரை எதிர்த்துப் போர் செய்வதற்கு வந்த அர்ச்சுனன், எதிர்க்கட்சியிலே நின்ற தனது உறவினர்களையும் ஆசிரியர்களையும் கண்டு, அவர்களையெல்லாம் கொல்ல வேண்டுமோ? என்று மனங்கவன்று தயங்குகின்றான். இந்தத் துக்கத்தை நீக்கிக் கலக்கத்தைத் தெளிய வைப்பதற்காக அமைந்ததே கீதா உபதேசம்.

துக்கமே தத்துவ ஆராய்ச்சிக்கு மூலம்

துக்கந்தான் தத்துவ விசாரத்துக்கு ஆரம்பம். நாம் பலரிடம் மதிப்பு வைத்திருக்கிறோம். பல பொருள்களிலே பற்று வைத்திருக்கிறோம். பற்றை நீக்குவதே துக்கமனைத்தையும் போக்குவதற்கு வழி. கடமையைச் செய். அதன் பலனில் பற்று வைக்காதே என்பதே பகவானின் உபதேசம். கீதை பேசுவது நிஷ்காமிய கன்மம். காமியம் என்பது காமம் என்ற சொல்லடியாகப் பிறந்தது. நிஷ் என்பது எதிர்மறைப் பொருள். நிஷ்காமிய கன்மம் என்பதற்கு பலனை விரும்பாது செய்யும் கருமம் என்பதே கருத்தாகும்.

நான்கு விசயங்கள்

துக்கந்தான் தத்துவ ஆராய்ச்சிக்கு அடிப்படை. அந்தத் துக்கத்தை நான்கு விசயங்களுக்குள் அடக்கலாம். அவை, துக்கம், துக்க நிவாரணம், துக்க உற்பத்தி, துக்க நிவாரண மார்க்கம் என்பவை. அர்ச்சுனனுக்கு ஏற்பட்டது துக்கம். அவன் நாடியது துக்கத்துக்கு நிவாரணம். பகவான்

துக்கம் எதிலிருந்து உற்பத்தியாகின்றது என்பதையும் அதற்கான காரணத்தையும் கூறியுள்ளார்.

துறவும் சன்னியாசமும்.

செய்யும் செயலின் பலனில் நாம் கொள்ளும் பற்றையோ, ஆசையையோ துறப்பதே துறவு. அப்படித் துறப்பதே உண்மையான சன்னியாசம். உண்மையான தியானமும் அதுவே. ஆசைகளை ஞானமாகிய அக்கினி எரிப்பதே வேள்வி.

பற்றை நீக்குவதற்கு உபாயம்

பற்று என்னும்போது சுயநலப்பற்றே இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படுகின்றது. அப்பற்று நிலையில்லாதது. நிலையான இன்பம் பரம்பொருளின் மேல் பற்று வைப்பதே.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என வள்ளுவர் உரைப்பதும் இதுவேயாகும்.

அலகு – II

உலகாயதம்

பிரமாணங்கள் – 1. பிரத்தியட்சம்

நமது அறிவை நாம் மூன்று வகைகளில் பெறுகிறோம்.

1. பிரத்தியட்சம் 2. அனுமானம் 3. ஆப்த வாக்கியம்

1. பிரத்தியட்சம்

பொறிகளின் வாயிலாக நாம் பெறும் நேரடியான அறிவு பிரத்தியட்சம்

2. அனுமானம்

நெருப்பைக் காணாமலே புகையை மட்டும் கண்டு நெருப்பு அங்குள்ளது என்று யூகிக்கிறோம். இத்தகைய அறிவை நாம் அனுமானத்தின் மூலமே அடைகிறோம்.

3. ஆப்த வாக்கியம்

ஆன்றோர்கள் தாம் நேரே கண்டும் அனுபவித்தும் கொண்ட அறிவைச் சொல்லியும் எழுதியும் வைத்துள்ளனர். அவர்களுடைய வாக்கியங்களே ஆப்த வாக்கியங்கள்.

உலக உற்பத்தி

காட்சிக்குப் புலனாகும் நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கும்தான் அடிப்படையான பொருள்கள். ஆகாயம் என்பதை ஐந்தாவது பூதமாக ஏனைய தத்துவஞானிகள் கொள்வர். ஆனால் ஆகாயம் காட்சிக்குப் புலனாகாது. அனுமானம் மூலமே அறியப்படுவது. அனுமானத்தை ஏற்றுக் கொள்ளாத லோகாயதர் ஆகாயத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. பூதங்கள் நான்கும் வெவ்வேறு விதத்தில் ஒன்று சேர அச்சேர்க்கையால் எழுந்தனவே இவ்வுடலும் உலகிலுள்ள பல்வேறு பொருள்களும்.

உயிர் உண்டாகும் விதம்

உடலின் வேறாம் உயிர் என்ற ஒன்றை நாம் யாரும் கண்ணாற் கண்டதில்லை. அனுமானத்தின் வாயிலாகத்தான் உயிர் உண்டு

சமணம் - 1

இப்பிரபஞ்சம் எதிலிருந்து தோன்றியது? எங்ஙனம் தோன்றியது? எதற்காகத் தோன்றியது? இதற்கு அழிவு அல்லது ஒடுக்கம் என்றாவது ஏற்படுமா? பின் என்ன ஆகும்? இவைதாம் தத்துவ ஞானத்துக்கு விஷயம். இவ்வினாக்கள் தாம் தத்துவ ஞானிகள் உலகையும் பொருள்களையும் உற்று நோக்குமாறு செய்தன. அவர்கள் புறத்தேயுள்ள பொருள்களை ஊன்றிக் கவனித்தனர்; நன்கு ஆராய்ந் தனர். அவ்வாராய்ச்சியின் விளைவாகத் தத்துவ ஞான வுலகில் இருபெருங்கொள்கைகள் எழுந்துள்ளன.

கருத்துவாதம்

புறத்தேயுள்ள பொருள்களை ஆராய்வதில் ஆராய் வனுக்கும் ஆராயப்படும் பொருள்களுக்கும் சம்பந்தம் எப்படி ஏற்படுகின்றது என்பதே முதலில் ஆராயப்பட வேண்டும். காண்பவனும் அறிபவனுமாகிய ஆத்மா அதிசூக்குமப் பொருள். காணப்படுவன தூலப் பொருள்கள். இவை இரண்டும் ஓரினத்தன அல்ல. ஓரினப் பொருள்கள்தாம் சம்பந்தப்பட முடியும். ஏதாவது ஒரு விதத்திலாவது ஒற்றுமை இருந்தால்தான் தொடர்பு ஏற்பட முடியும். முற்றி லும் முரணான இரு பொருள்களுக்குத் தொடர்பு ஏற் படுவது எப்படி? சூக்குமப் பொருளாகிய ஆத்மா புறப் பொருள்களில் தூலமாகப் பொருந்துவதில்லை. ஆத்மாவில் ஏற்படும் அறிவுக்குப் பொருளாகப் புறத்தே பொருள்கள் உள்ளனவோ என்பதைத்தானும் அறிய வழி இல்லை. புறத்தே பொருள்கள் இருக்கின்றன என்பதை நுணுகி ஆராயின், அப்பொருள்கள் நம் எண்ணத்தில் மட்டுமே இருக்கின்றன என்பது புலனாகும். யாவும் நம் எண்ணமே; எல்லாம் எம் கருத்தே. வெளியிலே உள்ள ஒரு பொருளை

நம் கண்ணால் நேரே காண்கின்றோமே; அது நம் கையால் தொடத்தக்கதாயிருக்கின்றதே! அப்பொருள் உண்மையில் வெளியில் இல்லை; அது நம் கருத்தில் மட்டுமே உள்ள தென்பது எங்ஙனம் பொருந்தும் என ஆட்சேபிக்கலாம். ஆனால், கண்ணால் காண்கின்றோம்; கையால் தொடு கின்றோம் என்ற உணர்ச்சிகள்கூட நமது கருத்தில்தானே நிகழுகின்றன! நாம் காணும் அதே பொருளைப் பிறர் பலரும் காணுகின்றார்கள்; அப்பொருள் இருப்பதாக அவர்களும் கூறுகின்றார்கள். எனவே, அப்பொருள் இருக் கின்றதென்பது உண்மை எனக் கொள்ளலாமே எனின், பிறர் பலர் இருக்கிறார்கள்; அவர்கள் பேசுகிறார்கள் என் பனகூட எமது மனத்தின் மூலமே எமக்குக் கிடைக்கின்றன. எனவே, அவையும் எம் மனக்கருத்திலுள்ளவைதாமே!

கருத்துகளுக்கு அப்பாற்சென்று அவை ஒவ் வொன்றும் குறிக்கும் நிகழ்ச்சிகளும் பொருள்களும் உளவோ இலவோ என ஆராய்ந்து முடிவு செய்வதுகூட நம் கருத்தே; நமது எண்ணமே. நாம் நிற்கிறோம்; நடக் கிறோம்; எழுதுகிறோம்; பேசுகிறோம்; பிறர் கேட்கி றார்கள் என்பன யாவும் நம் எண்ணமே. பெரிய உலகம் இருக்கின்றது; அது ஒரு நியதிக்கு உட்பட்டு இயங்குகின்றது. மக்கள் பிறக்கிறார்கள்; வாழ்கிறார்கள்; மடிகிறார்கள் என் பன போன்ற இவை யாவும் உண்மையில் வெளியே நடை பெறுகின்றன என்றே சாதாரணமாக நாம் ஒவ்வொரு வரும் நம்புகின்றோம். ஆனால், ஆழ்ந்து சிந்தித்தால் இவை யாவும் நம் எண்ணத்திலேதான் நிகழுகின்றனவென் பது புலனாகும்.

எண்ணத்தைத் தாண்டி அப்பாற் பாய முடியாது. பாய்ந்து புறப்பொருள்களை நேரே தொட முடியாது. இதோ, தொடுகின்றோம்; தொட்டுவிட்டோம் எனக் கருதுவது, உணர்வதுகூட எண்ணமே. எப்படி முயன்றா லும் நம் மனத்திரைக்கும் நமக்கும் தொடர்பு இருக்க

முழுவதுமேயொழியப் புற நிகழ்ச்சிகளுக்கும் புறப்பொருள்களுக்கும் நமக்கும் தொடர்பு இருக்க முடியவே முடியாது. புற நிகழ்வுகளும் பொருள்களும் பொறிகள் வாயிலாக நம் மனத்திரையில் விழ்வதும், நமக்கு அறிவு, உணர்வு, அநுபவமாகியன ஏற்படுவதும் மின்வேகத்தில் நிகழ்கின்றன. எனவே, இதற்குள் எவ்வெம் மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதைக்கூட யாம் நன்கு அறியோம். எப்போது ஆத்மாவுக்கும் புறவுலகத்துக்கும் நேரான தொடர்பு கிடையாதோ அப்போதே புறவுலகம் ஒன்று உண்மையில் இருக்கின்றது என்பதும், அங்ஙனம் இருப்பினும் நாம் கருதுவதுபோலவே இருக்கின்றது என்பதும் சாதிக்க முடியாதன ஆகின்றன. இந்த ரீதியில் படிப்படியாகவும் மிக விரிவாகவும் ஆராய்ந்ததன் முடிவாகக் கருத்து மட்டுமே உண்மை என்ற கருத்துவாதம் எனப்படும் புரட்சிகரமான தத்துவம் ஒன்று தோன்றிற்று.

மெய்ம்மைவாதம்

இக்கொள்கையைத் தர்க்க ரீதியாக மறுத்து, உலகம், பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியவை நம் கருத்து அல்ல; அவை யாவும் புறத்தே மெய்யாகவே உள்ளன எனக் கொள்வதே மெய்ம்மை வாதம் எனப்படும். இதனை **யதார்த்த வாதம்** எனக் குறிப்பிடுவதுமுண்டு.

கருத்துவாதத்தின் விளைவு

வேறுபட்ட இவ்விரு கொள்கைகளும் இவ்வளவோடு நிற்பன அல்ல. இவற்றின் விளைவுகள் பல. அவற்றுள் முக்கியமான ஒன்றை இங்குக் குறிப்பிடல் வேண்டும். கருத்து மட்டுமே உண்மையென வாதிப்போருக்கு இவ்வுலகனைத்தும் எண்ணம் அல்லது கருத்து அல்லது அவ்வற்றின் நிலைக்களனான ஆத்மா என்ற ஒரேயொரு மூலப் பொருளுள் அடங்கும். அந்த ஒரு வஸ்துவைவிடப் பிற வஸ்து எதுவும் உண்டு என்றோ இல்லை என்றோ பேசக்கூட முடியாத நிலை ஏற்படும். சகலமும் ஒன்றுள் அடங்கும். அந்த

ஒன்றே சகல உலகத் தோற்றத்துக்கும் காரணம் என்ற **ஒருமை வாதத்**திலேயே கருத்துக்கு ஆதிக்கம் கொடுப்போர் போய் முடிவர்.

மெய்ம்மைவாதத்தின் முடிவு

எண்ணத்தில் மட்டும் அல்ல, உண்மையிலும் பொருள்கள் உள்ளன எனக் கொள்வோருக்குப் பொருள்கள் பல என்ற கொள்கையாகிய **பன்மைவாதம்** தவிர்க்க முடியாதது ஆகின்றது.

எனவே, கருத்து வாதத்தை ஆதரித்து, உலகத் தோற்றத்துக்கு மூலப் பொருள் ஒன்றே – அதாவது, ஆத்மா ஆகிய ஒன்றே—என்று கொள்வோர் ஒரு பிரிவினர்; மெய்ம்மை வாதத்தை ஆதரித்து உலகத் தோற்றத்துக்கு மூலப்பொருள் பல என்று கொள்வோர் ஒரு பிரிவினராகத் தத்துவஞான உலகில் இருபெரும் பிரிவினர் காணப்படுகின்றனர்.

சமணரது நிலை

இவருள் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவரே சமணர். சாதாரண மக்களாகிய நமக்கு இவ்விரண்டாம் பிரிவினர் கொள்வனவே ஏற்புடையன போன்றும், முதற் பிரிவினர் கொள்வன அர்த்தமற்றனவாகவும் தோன்றுவது தான் இயல்பு. ஆயினும், உலகம் போற்றும் உத்தம தத்துவ ஞானிகளுட் சிலராகிய கிறீஸ் தேசத்து **பிளேற்றோ,** ஜெர்மன் தேசத்து **கான்ற், ஹெகெல்,** இந்திய தேசத்துச் **சங்கரர்** போன்றோருடைய முடிவுகள் யாவும் முதற்பிரிவையொட்டி எழுந்தனவேயாகும்.

ஜீவனும் அஜீவனும்

சமணரைச் சைனரென்றும், அமணரென்றும், அசிவகரென்றும், அருகதரென்றும் சொல்வதுண்டு. அவர்களது கொள்கைப்படி உலகம் தெளிவான இரு பிரிவுகளுள் அடங்

பௌத்தம் - 2

பௌத்த மதத்துக்கும் இந்து மதத்துக்கும் அடிப்படைத் தத்துவங்களில் அதிக வேற்றுமை இல்லை என்பதே பல பிரபல தத்துவஞானிகளின் கருத்து என்றும், அங்ஙனம் கருதுவோர் பெரும்பாலும் இந்துக்களே என்றும் முந்திய கட்டுரையிற்குறிப்பிட்டோம். இத்தகைய கருத்து எவ்வளவு தூரம் பொருந்தும் என்பதனை ஆராயுமுகமாக, பௌத்த தத்துவத்துக்கும் இந்து தத்துவங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தத்துவ ஞானரீதியிலே ஆராயத் தொடங்கினோம்.

தத்துவ முடிவுகளும் ஒழுக்கமும் பிரமாணங்களிலேயே தங்கியுள்ளன

உலகு, உயிர் ஆகியவற்றின் தோற்ற ஒடுக்கங்களை அறிய நாம் கைக்கொள்ளும் வழிகள் எவை? அத்தோற்ற ஒடுக்கம் பற்றிய உண்மையான அறிவைத் தரவல்லன என, எவ்வெவற்றை நாம் வாயில்களாக - அதாவது, பிரமாணங்களாக - கொள்ளுகிறோமோ, அவ்வவற்றுக்குத்தக நாம் அடையும் முடிவுகளும் வேறுபடும். இதனை முன்னரும் வற்புறுத்தியுள்ளோம். இது மிக முக்கியமான ஒன்றாதலால் இதனை மேலும் சற்று விளக்குவது அவசியம். உலகாயதரைப் போலக் "கண்ணாற் கண்டதை மட்டுமே நம்புவோம். காட்சி மட்டுமே பிரமாணம்" எனக் கொண்டால் நாம் அடைவது ஒரு முடிவு. காட்சியோடு மட்டுமில்லாது, காட்சியால் அறிய முடியாத சில உண்மைகளை அநுமான மூலமும் அறியலாம் என, அநுமானத்தையும் ஒரு பிரமாணமாகக் கொள்ளின் ஏற்படும் முடிவு இன்னொன்றாகும். நாம் நேரே கண்டோ நாமே ஊகித்தோ அறிய முடியாத பேருண்மைகளை அறிஞரின் உரை மூலமே அறியலாம் என, உரையையும் ஒரு பிரமாணமாக ஏற்றுக்கொள்ளின்

நாம் அடையும் முடிவு பிறிதொன்றாகும். காட்சி அல்லது பிரத்தியட்சம் மட்டுமே பிரமாணம் எனக் கொண்டமையால் உலகாயதர், காணப்படும் உலகம் மட்டுமே உள்ளது; உயிர், இறைவன் எனப் பேசப்படுவன யாவும் பொய் என்ற முடிவுக்கு வந்தனர். ஆகவே, எம்மதத்துக்கும் அம்மதம் ஏற்றுக்கொள்ளும் பிரமாணங்கள்தாம் அடிப்படை என்பது தெளிவாகின்றது. இந்த அடிப்படையிற்கூடப் பௌத்தமும் இந்து மதங்களும் தம்முள் முற்றிலும் மாறுபடுகின்றன.

பிரமாணம் பற்றிய வேற்றுமை

பௌத்தம், காண்டல், கருதல் ஆகிய இரண்டையுமே பிரமாணமாகக் கொள்ளுகின்றது. உரையாகிய ஆப்த வாக்கியத்தை அதாவது வேதவாக்கை அது ஏற்பதில்லை. இந்து தரிசனங்களோவெனில் காண்டல், கருதல், வேதம் ஆகிய மூன்றையும் பிரமாணமாகக் கொள்ளுவதுமட்டுமன்றி, எந்த வேதத்தைப் பௌத்தர் பிரமாணமாகக் கொள்ள மறுக்கின்றனரோ, அந்த வேதத்தையே பிரமாணம் மூன்றனுள்ளும் மிக முதன்மையானதெனவும் கொள்ளுகின்றன. இவற்றைச் சென்ற அத்தியாயத்தின் இறுதியிலே கூறினோம். காண்டல், கருதல் ஆகிய இரண்டையும் பிரமாணமாகக் கொள்வதில் பௌத்தமும் இந்து மதங்களும் ஒற்றுமைப்படுகின்றன. ஆனால், இந்த ஒற்றுமையைப் பொருட்படுத்தாது, வேதத்தைப் பிரமாணமாக ஏற்பதையும் ஏற்காமையையுமே காரணமாகக்கொண்டு, இந்து மதங்களை வைதிக மதங்கள் எனவும், பௌத்தத்தை அவைதிக மதம் எனவும் அறிஞர் பெயரிட்டு வழங்கி வருவதிலிருந்தே, இவ்வேற்றுமை எத்தனை அடிப்படையான ஒன்று என்பது தெற்றெனப் புலனாகின்றது. இதனைப் பிரமாணம்பற்றிய வேற்றுமை எனலாம்.

மூலப்பொருள் பற்றிய வேற்றுமை

இனி, மூலப்பொருள்பற்றிய கொள்கைகளில் இரு மத முடிவுகளையும் ஆராய்வோம். வேதவாக்கைப் பிரமாணமாக ஏற்பதன் பலன்தான் கடவுள் உண்டென்னும் நம்பிக்கை. கடவுள் உண்டென்பதற்கு முக்கிய பிரமாணம் வேத வாக்கே. பிரத்தியட்சப் பிரமாணத்தால் கடவுள் உண்டென நிரூபிக்க முடியாது. கடவுள் காட்சிப் பொருளல்ல. அநுமானத்தால் கடவுள் உண்டென நிரூபிப்பதுகூட அத்துணை எளிதல்ல. இந்து மதமெதுவும் அநுமான மூலம் கடவுளுண்டு என்னும் உண்மையை நிரூபித்துவிடலாமெனக் கருதியதாகத் தோன்றவில்லை. வேதப் பிரமாணத்தால் பெறப்பட்ட கடவுளுண்மையை அநுமான மூலமும் அடையவே அவை முயன்றுள்ளன. வேதத்தால் பெறப்பட்ட உண்மையை அநுமானம் வலியுறுத்துமேயொழிய, அநுமானம் தானாகவே தனித்து நின்று அவ்வுண்மையைத் தர வல்லதல்ல. இந்து மதங்கள் கடவுளுண்மையை நிரூபிக்க எடுத்தாளும் அநுமான அளவையை இந்த முறையிலேதான் கொள்ள வேண்டும்.

பிரத்தியட்சப் பிரமாணமும் அநுமானப் பிரமாணமும் உதவும் வகை

அறிவு கடவுளுண்மையைத் தராது. அவ்வுண்மையை நமக்குத் தரும் வாயில் வேறு. அங்ஙனம் வேறு வாயில் மூலம் கிடைத்த கடவுளுண்மையை உறுதிப்படுத்தமட்டுமே அறிவால் இயலும் என நாம் மேலே சொன்னதே மேல்நாட்டுத் தத்துவ ஞானிகள் பலரது கருத்தும் ஆகும்.

கான்ற் என்பவரின் கருத்து

மேல்நாட்டுத் தத்துவ ஞானிகளுள், ''அறிவு இவ்வளவு தூரந்தான் செல்லும். இதற்கப்பால் அதனால் செல்ல இயலாது'' என அறிவின் எல்லையை வரையறை செய்து காட்டிய பெருமை கான்ற் என்ற ஜெர்மனிய அறிஞருக்கே உரியது. அவர் கடவுளுண்டு என்பதை நிலை

சாங்கியம் - 1

இருபெரும் பிரிவு

இந்திய மதங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, வேத வாக்கியங்களைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்வது; மற்றது, வேத வாக்கியங்களைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளாதது. வேத உபநிடதங்களை ஏற்காத பிரிவைச் சேர்ந்தவை உலகாயதம், சமணம், பௌத்தம் ஆகிய மூன்றும். வேத உபநிடதங்களைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளும் பிரிவுள் சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய பலவும் அடங்கும். இவற்றுள் மிகப் பழையது சாங்கியம் என்பது அறிஞர் பலரது கருத்து. இதனை முதலில் முறைப்படுத்தி வெளியிட்டவர் **கபிலர்** என்பவர். இது மிகப்பழைய மதமாயிருந்தும் இதைப் பற்றிய இலக்கியங்கள் மிகக் குறைவாயிருப்பது சற்று வியப்பாயுள்ளது. இப்போது கிடைப்பனவற்றுள் மிகப் பழையது கி. பி. 5ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த **ஈஸ்வரகிருஷ்ணர்** என்பவரால் இயற்றப்பட்ட **சாங்கிய காரிகை** என்னும் நூலாகும்.

வேதத்தை ஒப்புக்கொள்ளும் மதங்கள் யாவும் தம்முள் ஒற்றுமையுடையன அல்ல

வேதத்தைப் பிரமாணமாக ஏற்பன என்ற காரணத்தால் சாங்கியத்துக்கும் அதோடு சேர்த்து மேலே குறிப்பிட்ட மதங்களுக்கும் இடையில் நெருங்கிய உறவும் ஒற்றுமையும் உண்டு எனக் கொள்வதற்கில்லை. வேதத்தை ஏற்கும் வேதாந்தத்துக்கு, வேதத்தை ஏற்காத பௌத்தத்தின் ஒரு பிரிவாகிய மகாயானத்தோடு உள்ள உறவு, வேதத்தை

ஏற்கும் தன் பிரிவிலுள்ள சில மதங்களோடு கிடையாது. சைவ சித்தாந்தம் வேதத்தை ஏற்காத மதங்களைப் புறச் சமயங்கள் எனக் கருதுகின்றது. ஆயினும், அச்சைவ சித்தாந்தம் வேதத்தை ஏற்கும் எல்லா மதங்களையும் ஒரே படியில் வைப்பதில்லை. அவற்றுள் பல விதத்திலும் தன்னோடு பெரிதும் உடன்பாடான சில மதங்களை அகச் சமயம் என்றும், உடன்பாடு குறைவான சிலவற்றைத் தனக்கு எட்டத்தில் வைத்து அகப்புறச் சமயம் என்றும், இன்னும் சிலவற்றை இன்னும் எட்டத்தில் வைத்துப் புறச்சமயம் என்றும் கருதுகின்றது. சைவ சித்தாந்தத்தால் புறச்சமயம் எனக் கருதப்படுவனவற்றுள் ஒன்றுதான் இச்சாங்கியம்.

சாங்கியம் என்ற சொல்

இதற்கு இப்பெயர் வந்ததற்குப் பல காரணங்களும், சாங்கியம் என்ற சொல்லுக்குப் பல பொருள்களும் கூறப்படுகின்றன. அவை அனைத்தையும் இங்கு விவரியாது அவற்றுள் ஒன்றை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம். சாங்கியம் என்ற சொல்லுக்குப் பொருள் பூரண அறிவு. எனவே, மூலப் பொருள்பற்றிப் பூரண அறிவைத் தரும் மதத்துக்குச் சாங்கியம் என்ற பெயர் ஏற்படலாயிற்று என்கின்றனர் சில அறிஞர்.

மாற்றம், நிலைபேறுபற்றிச் சாங்கியமும் ஏனைய மதங்களும்

மதங்கள் யாவும் ஈடுபடுவது இப்பிரபஞ்சத்தின் தோற்ற ஒடுக்கங்களை ஆராய்வதிலேயே. தம் ஆராய்ச்சியின் பலனாக அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு முடிவுக்கு வந்துள்ளன. சாங்கியம் கண்ட முடிவுகளை இயன்றவரை இங்குக் காட்டுவோம். நம் எல்லோருக்கும் இரண்டுவித அனுபவங்கள் உள்ளன. நமக்குள் 'நாம்' என்ற உணர்ச்சிக்கு நிலைக்களனாக ஏதோ ஒன்று நிலைத்திருப்பதாக அனுபவம் ஒன்று. மற்றது, நமது உடல் உட்பட, நமக்குப்

புறத்தனவான அனைத்தும் மாற்றமடைந்துகொண்டிருக்கின்றன என்ற ஓர் அனுபவம். இவற்றுள் உண்மை எது என்பது கேள்வி. நிலைபேறுதான் உண்மை; மாற்றம் பொய் என்கின்றது வேதாந்தம். மாற்றந்தான் உண்மை; நிலைபேறு பொய் என்கின்றது பௌத்தம். இவை இரண்டும் இரண்டு தீவிர நிலை. இரண்டையும் இரண்டு எல்லையாக வைத்துக்கொள்ளலாம். இந்த இரண்டுக்கும் நடுவில் ஏனைய இந்திய மதங்கள் அனைத்தையும் அடக்கிவிடலாம். அவை அனைத்தும் மாற்றம், நிலைபேறு இரண்டும் உண்மை என்று கொள்கின்றன. அத்தகைய கொள்கையுடையவற்றுள் ஒன்றுதான் சாங்கியம்.

சாங்கியத்தின் அடிப்படை நியதி

சாங்கியம், மாற்றம், நிலைபேறு இரண்டும் உண்மை எனக்கொண்ட போதிலும், எது மாற்றம் அடைகின்றதோ அஃது அறிவுள்ள பொருள் ஆகாது; அதே சமயம் அறிவே சொரூபமான பொருள் எதுவோ அது மாற்றம் அடையாது என்ற பெரும் அடிப்படை நியதி ஒன்று இருப்பதாகவும் முடிவு செய்துகொண்டது. சாங்கியம் கண்ட இந்த அடிப்படை நியதி மிக முக்கியமானது. இது நாம் கருத்தில் பதிக்க வேண்டிய ஒன்று. இதனைக் கருத்தில் பதித்துக்கொண்டால் சாங்கியத்தின் ஏனைய முடிவுகளை விளங்கிக்கொள்வது இலகு.

முரண்பாட்டை நீக்க வழி

உபநிடதங்களிலே, 'இந்த உலகம் ஒரேயொரு மூலப் பொருளிலிருந்துதான் தோன்றுகின்றது; அப்பொருள் அறிவே சொரூபமானது' என்று கருதப்படும் பல வசனங்கள் காணப்படுகின்றன. ஆனால், மேலே நாம் காட்டிய சாங்கிய நியதிப்படி இது பொருந்தாது. அறிவுள்ள பொரு

யோகம்

முந்திய கட்டுரைகளில் இந்திய தத்துவ ஞானத்தின் பிரிவுகளுள் ஒன்றாகிய சாங்கியத்தைப்பற்றி ஆராய்ந்தோம். சாங்கியத்தோடு எப்போதும் ஒருங்கு சேர்த்துப் பேசப் படுவது யோகம் எனப்படும் இன்னொரு பிரிவு. சாங்கிய யோகம் என அறிஞர்கள் இவை இரண்டையும் ஒருங்கே குறிப்பிடுவதற்கு இவற்றுக்கிடையேயுள்ள அடிப்படைத் தத்துவ ஒற்றுமையே காரணம். இவை இரண்டுக்கும் குறிக்கோளும் ஒன்றே.

யோகம் என்ற சொல்

சாங்கிய யோகத்திலே **உயிர்**, **புருடன்** என வழங்கப் படும். உயிருக்கு மறுதலையாய உடல் உட்பட்ட சடப் பொருள் அனைத்தும் பிரகிருதி எனப்படும். என்றைக்கோ எங்ஙனமோ பிரகிருதி புருடனைத் தன் வலையிற்சிக்கச் செய்துகொண்டது. புருடனும் எங்ஙனமோ தன் தூய நிலையிலிருந்து வழுவிப் பிரகிருதியின் வலையிலே சிக்கிக் கொண்டான். எனவே, இப்பிரகிருதி சம்பந்தத்திலிருந்து தன்னைப் பிரித்து, அறிவே மயமாய தன் உண்மைச் சொரூபத்தைப் புருடன் அடைவதே சாங்கியம், யோகம் ஆகிய இரண்டுக்கும் குறிக்கோள். யோகம் என்ற சொல் லுக்குப் பிரிதல் என்பதே இங்குப் பொருளாகின்றது. பிர கிருதித் தொடர்பிலிருந்து புருடன் பிரிதல்தான் யோகம். ஆனால், உபநிடதத்திலே யோகம் என்ற சொல்லுக்குப் பொருள் இது அல்ல. அங்கு யோகம் என்பதன் பொருள் சேர்தல். சீவன் பரம்பொருளோடு சேர்தலையே உபநிடதம் யோகம் என்ற சொல்லால் உணர்த்துகின்றது. ஆனால், பரம்பொருளைச் சேர்தலே சீவனின் குறிக்கோள் என்

பதைச் சாங்கிய யோகம் ஏற்றுக்கொள்வதில்லை. அதனால் தான், யோகம் என்ற சொல் சேர்தல் என்னும் அதன் பொதுவான பொருளில் இங்கு வழங்காது, அதற்கு நேர் மாறாகப் பிரிதல் அதாவது புருடன் பிரகிருதியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளல் என்ற பொரு ளில் வழங்குகின்றது. இந்த யோக மதத்தை முதன்முதல் வரையறுத்து விளக்கியவர் **பதஞ்சலி** எனப்படுவர். பதஞ்சலி காலத்துக்கு முன்பே யோக மதம் தாபிக்கப்பட்டுவிட்ட தாக அறிஞர் கருதுகின்றனர். ஆனால், பதஞ்சலி இயற்றிய **யோக சூத்திரம்** என்ற நூலே யோகத்தைப்பற்றி இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களுள் மிகப் பழையது; இலக்கண நிபுணர் ஒருவருக்கும் பதஞ்சலி என்ற பெயர் உண்டு. அவர் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் எனக் கருதப்படுகின்றார். அவரும் யோக சூத்திரத்தை இயற்றிய பதஞ்சலியும் ஒருவரோ என்பது தெரியவில்லை. யோக சூத்திரத்துக்குக் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **வியாசர்** என்பவர் தலைசிறந்த வியாக்யானம் ஒன்றனைச் செய்துள்ளார்.

ஞானமும் தியானமும்

சாங்கியம், கொள்கைகளை விவரிக்கின்றது என்று கொண்டால், யோகம், அக்கொள்கைகளை நடைமுறை யில் அனுட்டிக்கும் வழிவகைகளை விவரிக்கின்றது என லாம். இதுவே இவையிரண்டுக்குமுள்ள தொடர்பு என்றும் கூறலாம். பிரகிருதி, புருடன் ஆகியவைபற்றிய உண்மைகளை உள்ளவாறு உணர்வதே வீடுபேற்றுக்கு வழி என ஞான மார்க்கத்தை வற்புறுத்துகின்றது சாங்கியம். ஆனால், யோகம் வற்புறுத்துவது தியானத்தை.

எட்டு அங்கங்கள்

இன்று சாதாரணமாக நாம் செய்ய முடியாத சில செயல்களைச் சிலர். மந்திரங்களாலும் தந்திரங்களாலும் செய்து காட்டுகின்றனர்; அவையல்ல யோகம். மூச்சை

அடக்குவது, மூக்கு நுனியை நோக்கிக்கொண்டு மௌன யாய் உட்கார்ந்திருப்பது ஆகியவையும் யோகமல்ல. சித்த சுத்தி ஏற்பட்டு, நான் எனது என்ற நினைவு அறவே ஒழிதலே யோகமாகும். இச்சித்த சுத்தியின்பொருட்டுப் படிப்படியாக அனுட்டிக்க வேண்டிய எட்டு விதிகளை யோக மதத்தினர் வகுத்தனர். உள்ளத்தைத் தூய்மைப்படுத்த வேண்டின் முதலில் உடலைக் கட்டுப்படுத்த வேண்டும். இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்திய தத்துவ ஞானிகள் கண்ட பேருண்மை. சித்த சுத்தியின் பொருட்டு யமம், நியமம் என இரு விதிகள் வகுக்கப் பட்டுள்ளன. இவையிரண்டும் நம் விழைவுகளை நேர் வழிப்படுத்தத் துணை செய்வன. இவற்றுள் முன்னதான யமம், இது தகாது, இது தகாது என எதிர்மறை முகமாக விதிகளை வகுப்பது. உதாரணமாக, பிற உயிர்களை இம்சித்தல், பொய் பேசுதல், களவாடல், உடைமைகளைப் பெருக்குதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பது. பின்னதான நியமம், இது தகும், இது தகும என உடன்பாட்டு முகமாக விதிகளை வகுப்பது. உதாரணமாக, தூய்மை, திருப்தி,. நல்விழைவு, தத்துவ ஞான நூல்களைக் கற்றல் போன்றவைகளே மேற்கொள்ளத் தக்கன என்பது. இவற்றை அடுத்து மேற்கொள்ள வேண்டியவை ஆசனம், பிராணாயாமம் ஆகிய இரண்டுமாகும். இவற்றுள் ஆசனம் என்பது யோகத்தின்பொருட்டு உட்கார வேண்டிய முறையைக் கூறுவது. பிராணாயாமம் மூச்சை அடக்கும் முறையைக் கூறுவது. இத்தகைய ஆரம்ப சாதனைகளால் நமது புலன்களை அவற்றுக்குரிய பொருள்களின்மேலே செல்லவிடாது தடுக்கலாம். இதற்குப் பிரத்தியாகாரம் என்று பெயர். புலன்களை அவற்றுக்குரிய பொருள்களின்மேல் செல்லவிடாது தடுக்கின், மனத்தை ஒருநிலைப்படுத்துவது எளிதாகும். மனம் ஒருநிலைப் படுவது தாரணம் எனப்படும். இந்நிலையை எய்தினால் தான் சாங்கியயோக உண்மைகளை ஊன்றித் தியானிக்க முடியும். இத்தியானத்தின் பயனாக விளைவதே கடைசி

நிலையான சமாதி. இந்தச் சமாதி நிலையிலும் இரு படிகள் உள. இரண்டாம் படியை உறக்கம் அற்ற உறக்கம் என்பர். இந்நிலையில் உறக்கத்தில் நமக்கு ஏற்படுவது போல நாம் என்ற உணர்வும், நம்மைச் சூழ்ந்த உலகைப் பற்றிய நினைவும் இல்லாமற்போய்விடுகின்றன. அதே சமயம் இந்நிலை சூன்யமான ஒன்றும் அல்ல. ஏனெனில், புருடன் பிரகிருதித் தளையிலிருந்து விடுபட்டுத் தனது பூரணப் பொலிவுடன் விளங்கும் நிலை இதுவே. இந்த நிலையை அடைந்தவனே சீவன்முக்தன் எனப்படுவான். அவன் பிரகிருதித் தொடர்பு நீங்கியவன். எனவே, ஆசையும் துன்பமும் அவனை அணுகா.

சாங்கியமும் யோகமும் மாறுபடும் இடம்

இதுவரை சாங்கியமும் யோகமும் தம்முள் அதிகம் மாறுபடாத இடங்களையே குறிப்பிட்டோம். இனி, அவை தம்முள் மாறுபடும் பிரதான இடமொன்றைக் குறிப்பிடுவோம். கண்ணுக்குப் புலனாகும் இந்த உலகம், கண்ணுக்குப் புலனாகாத பிரகிருதி எனப்படும் அதிநுட்பமான ஒரு பொருளிலிருந்து தோன்றுகின்றது. காணப்படும் உலகு மட்டுமல்ல; அவ்வுலகினைக் காணும் கண்கூடப் பிரகிருதியிலிருந்தே தோன்றுகின்றது. கண் காண்பதற்குத் துணை செய்யும் மனமும் பிரகிருதியிலிருந்து தோன்றுவதே. இவ்வாறு சாங்கியர் கூறுவதை யோக மதத்தினரும் ஏற்றுக் கொள்வர். ஆனால், அறிவும் உயிருமற்ற இப்பிரகிருதியை உலகை உற்பத்தி செய்யுமாறு இயக்குவது யார்? ''பிரகிருதியை இயக்குவதற்கு ஒருவரும் தேவையில்லை. புருட சந்நிதி, அதாவது உயிர்களின் முன்னிலை மட்டுமிருந்தால் போதும்.'' இதுதான், இறைவன் ஒருவன் உளன் என்பதை ஏற்காதோராகிய சாங்கியர் தரும் விடை. இந்த விடையிலுள்ள குறைபாட்டைச் சாங்கியத்தைப்பற்றிய

வைசேடிகம் – 1

இரு அடிப்படைப் பிரச்சினைகள்

தத்துவ ஞான உலகிலே மிக அடிப்படையான பிரச்சினைகள் இரண்டு உள. இவை கீழைத் தேசத் தத்துவ ஞான உலகினுக்கு மட்டும் உரியனவல்ல. மேலைத் தேசத்திலும் இவைதாம் அடிப்படையான மிகப்பெரும் பிரச்சினைகள். இவற்றைத் தீர்ப்பதற்கு ஒவ்வொரு தத்துவ ஞானியும் மேற்கொள்ளும் வழியைப் பொறுத்தனவே தத்துவ உலகில் காணப்படும் ஏனைய கொள்கைகள் யாவும். இந்த இரு பிரச்சினைகளுள் ஒன்று, நமது மனம் மட்டுமே உண்மையில் உள்பொருளா? மனம் மட்டுமன்றிப் புறத்தே உள்ளனவாகத் தோன்றும் பொருள்களும் உண்மையில் உள்ளனவா என்பது. இது ஓர் அர்த்தமற்ற கேள்வி; இத்தகைய ஒரு கேள்விக்கு இடமே இல்லையே என்றுதான் பொதுவாக நம்முள் பலருக்கும் தோன்றும். மேலும் சிந்திக்கின், மனங்கூட உடலோடு அழிந்துவிடும்; எனவே, மனத்தைவிட உண்மையில் உள்ளது என்று கருதத்தக்கன புறத்தே உள்ள இவ்வுலகும், அதன் கண்ணுள்ள பொருள்களுமே என்றுகூட நமக்குத் தோன்றும். நிலைமை இவ்வாறாகவும் உண்மையில் உள்ள பொருள் நமது மனம் மட்டுமே என்று கருதுகின்றனர் அறிஞர் சிலர். அங்ஙனம் அவர்கள் கருதுவதற்கான காரணங்களை முந்திய சில கட்டுரைகளிலே குறிப்பிட்டுள்ளோம். எனவே, அவற்றை இங்கு விவரிக்க வேண்டா.

உண்மையில் உள்ள பொருள் மனமா, புற உலகா அல்லது இரண்டுமா அல்லது இரண்டுமே இல்லையா என்பது கேள்வி. இக்கேள்விக்கு இரண்டும் உண்மையே எனவிடை பகருவோரே வைசேடிகர். மனமும உண்மை,

புறத்தே நாம் காணும் பொருள்களும் உண்மை என்ற இக்கருத்தைப் பொதுவாகப் பலரும் ஏற்றுக்கொள்வர். இங்ஙனம் நாம் காண்பன யாவும் நாம் காணும் நிலையிலேயே புறத்தே இருக்கின்றன என நம்புவோர் மெய்ம்மைவாதிகள். எனவே, வைசேடிகர் மெய்ம்மைவாதிகள்.

தொடக்கத்திலே குறிப்பிட்ட இரு அடிப்படைப் பிரச்சினைகளுள் மற்றது, இவ்வுலகம் எதிலிருந்து உற்பத்தியாயது? இதன் தோற்றத்திற்குக் காரணமாய மூலப் பொருள் ஒன்றா பலவா என்பது. உலகம் உண்மையாகவே உள்ள பொருளல்ல; உலகம் யாவு நம் மனத்துள் அடங்கும் எனக் கூறுவோருக்கு ஈற்றில் மனம் என்ற ஒரே பொருள்தான் உண்மைப் பொருள் ஆகும். அவர்கள் ஒருமைவாதிகள். ஆனால், மனமு உண்மை, புறத்தே உள்ள பொருள்களும் உண்மை எனச் சாதிக்கும் வைசேடிகர் போன்றோர் உலகத்தோற்றத்துக்குக் காரணமான மூலப் பொருள் ஒன்று எனக் கொள்ள இடமேயில்லை. பல்வேறு இயல்புகளை உடைய இவ்வுலகத்துக்கு மூலம் ஒரேயொரு பொருள்தான் என்பது பொருந்தாது இதன் மூலமும் பலவே என்பதே வைசேடிகரது முடிவு. இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை நிலையானவை என்றோ, அடிப்படையானவை என்றோ கொள்பவர்கள் பன்மைவாதிகள்.

இவ்வைசேடிகரோடு அடிப்படைக் கருத்துகளிலே மிகுதியும் ஒற்றுமையுடையோர் நையாயிகர் எனப்படுவர். இந்த இரு மதத்தினருக்குமிடையே உள்ள கருத்தொற்றுமை காரணமாக, நூல்கள் யாவும் 'நியாய வைசேடிகம்' என இவை இரண்டையும் சேர்த்தே பேசுவது வழக்கம். நியாய வைசேடிகம் என இவை இரண்டையும் இணைத்துப் பேசுவது போலவே நாம் முந்திய கட்டுரைகளில் விளக்கிய சாங்கியத்தையும் யோகத்தையும் இணைத்துச் சாங்கிய யோகம் என நூல்கள் பேசும். நியாயமும் வைசேடிகமும் எங்ஙனம் தம்முள் ஒற்றுமையுடையனவோ அங்ஙனமே சாங்கியமும் யோகமும் தம்முள் ஒற்றுமையுடையன.

வைசேடிகத்தை விளக்கும் நூல்களுள்ளே மிகப் பழையது கணாத முனிவரால் இயற்றப்பட்ட வைசேடிக சூத்திரம்.

அழியும் பொருள்களும் அழியாப் பொருள்களும்

இந்த உலகும், உலகிலுள்ள பொருள்களும் (வேறு சில ஞானிகள் கருதுவது போல) ஒரு பொய்த் தோற்றம் அல்ல. உலகும் உண்மை; உலகிலுள்ள பொருள்களும் உண்மை என வைசேடிகர் கருதினர் என மேலே கூறினோம். அங்ஙனம் கருதினார் எனினும், அவை அழிந்து அழிந்து தோன்றுவதை அவர்கள் கவனிக்கத் தவறவில்லை. பொருள்கள் அழிவதையும் தோன்றுவதையும் கவனியாதார் யாருமிலர். எனினும், சாதாரண அறிவுடையோர் பொருள்களின் அழிவையும் தோற்றத்தையும் தம் கண்ணுக்குப் புலப்படும் எல்லைவரையுமே தொடர்ந்து கவனிப்பர். அதற்குமேல் அவர்கள் அவற்றைத் தொடர்வதில்லை. அதற்கு மேலும் தொடர்ந்து ஆராய்பவர்களே ஞானிகள்.

பொருள்களுக்குத் தோற்றம் என்பது என்ன? அழிவு என்பது என்ன? இதனை அறியும்பொருட்டு ஒவ்வொரு பொருளையும் நன்கு கவனித்தனர் வைசேடிகர். நம் கண்ணுக்குப் புலனாகும் ஒவ்வொரு பொருளும் பிளக்கவோ, பிரிக்கவோ, உடைக்கவோ தக்கதாகவே இருக்கின்றது. ஒவ்வொரு பொருளும் பல பகுதிகளால் ஆயது; எனவே, பகுதிகள் ஒன்று சேர்வதே பொருளின் உற்பத்தி. பின்னர் அப்பகுதிகள் தாமாகவோ பிற காரணத்தாலோ பிரிவதே பொருளின் அழிவு. நூல்களின் சேர்க்கையில் ஆடை என்ற ஒன்று தோன்றுகின்றது. பின்னர் நூல்களாகப் பிரித்துவிட்டால் ஆடை என்ற பொருள் இலதாகின்றது. ஆடையாகிய பொருளின் இதே கதிதான் அதன் பகுதியாகிய நூலுக்கும். அந்நூலின் பகுதிகள் சேர்ந்து நூல் தோன்றுகின்றது. பகுதிகள் பிரிய நூல் அழிகின்றது. அந்நூலின் பகுதிகளுக்கும் இதே கதிதான். அப்பகுதிகளின் பகுதிகளுக்கும் ... இதிலிருந்து பேருண்மை ஒன்று புலனாகின்றது.

நியாயம் - 1

நையாயிகர் மெய்ம்மைவாதிகள்

புறத்தே உள்ள பொருள்களுக்கும், அவற்றைக் காணும் நம் மனத்துக்கும் உள்ள தொடர்பை நிர்ணயிப்பது தத்துவ ஞான உலகில் ஒரு பெரும் பிரச்சினை என முன்னர்ப் பன்முறை குறிப்பிட்டுள்ளோம். புற உலகம் நம் மனத்தின் சிருட்டியா? அது நம் மனத்துள் அடக்கமா? அல்லது அது நம் மனத்தில் மட்டுமன்றி, உண்மையிலே புறத்தே உள்ளதா? என்பது கேள்வி. ''புறத்தேயுள்ள பொருள்களின் இருப்பும், இல்லாமையும், தோற்றமும் மறைவும் நம் மனத்தைப் பொறுத்தன அல்ல; நம் மனம் இருப்பிலென் இல்லாதொழியிலென்; புறவுலகமும் அதன்கணுள்ள பொருள்களும் இருந்தே தீரும்'' என மேலே எழுப்பிய வினாவுக்கு விடை பகருவோரே, நியாயம் என்னும் மதத்தைச் சேர்ந்தோர். நியாய மதத்தை நையாயிகம் என வழங்குவதுமுண்டு. அதனை ஏற்றுக் கொண்டோரை நையாயிகர் எனலாம்.

பிரத்தியட்சப் பிரமாணத்திலுள்ள குறை

நாம் காணும் ஒவ்வொரு பொருளும் நம் மனத்தில் மட்டுமன்றி வெளியுலகிலும் இருக்கின்றது எனக் கருதுவோர் மட்டுமல்லர் நையாயிகர்; அங்ஙனம் கருதுவோருள்ளே மிக முன்னணியில் நிற்பவர்களும் அவர்களே. உலகம் நம் மனத்துள் உள்ளது அல்ல; அது மனத்துக்கு வெளியே உண்மையாகவே இருக்கின்றது என்பது நையாயிகர் கருத்துப்படி ஒரு நம்பிக்கை மட்டும் அல்ல. காட்சியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு நையாயிகர் இம்முடிவை அடையவில்லை. ''வெளியே உள்ள ஒவ்வொரு பொருளையும் நாம் நேராகப் பார்க்கின்றோம். எனவே, நாம்

பார்ப்பது போல் ஒவ்வொரு பொருளும் புறத்தே இருக்கின்றது; உலகமும் இருக்கின்றது என்பதில் எவ்வித சந்தேகம்'' என்று யாருமே கேட்கமாட்டார். உண்மையில் இல்லாத பொருள்கள் எத்தனையோ சமயங்களில் உண்மையில் இருப்பனவாகக் காணப்படுகின்றன. தார் இடப்பட்ட தெருக்களில் வெயிற்காலங்களில் மோட்டாரிலே செல்லும் போது நம் எதிரே சற்றுத் தூரத்திலே தண்ணீர் இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால், இது உண்மை அல்ல. உண்மையில் இல்லாத பொருளாகிய நீரை உண்மையில் இருப்பதாகவே காண்கின்றோம். உண்மையில் இல்லாத ஒன்று இருப்பதாகக் காணப்படுவதற்கும் இது ஓர் உதாரணம். இது ஒரு புறமாக, நமது காட்சியில் பல சமயங்களில் நாம் ஒன்றை இன்னொன்றாகவும் காண்கின்றோம். பட்டைச் கயிறு நமக்குப் பாம்பாகக் காட்சியளிக்கின்றது. நாம் நேரே காண்கின்றோம் என்ற ஒரே காரணத்தை மட்டும் கொண்டு உலகு உண்மை எனக் கொள்ளமுடியாது என்பதையே இத்தகைய உதாரணங்கள் வலியுறுத்துகின்றன.

ஒரு பொருள் நம் கண்ணுக்குப் புலனாகின்றது. கண்ணுக்குப் புலனாகின்ற காரணத்தால் நாம் காண்பதுபோல் அது புறத்தே உண்மையில் இருக்கின்றது எனக் கொள்வது காட்சியளவை அல்லது பிரத்தியட்சப் பிரமாணம் எனப்படும். இப்பிரத்தியட்சப் பிரமாணத்தைப் பிரமாணங்களுள் மிக முக்கியமானதாகவே நையாயிகர் கருதுகின்றனர். ஆனாலும், இந்த ஒன்றை மட்டுமே கொண்டு உலக உண்மையை நிரூபிக்க அவர்கள் முற்படவில்லை என்ற கருத்தையே மேலே குறிப்பிட்டோம். வெறும் நம்பிக்கையைக் கொண்டோ, வெறும் பிரத்தியட்சப் பிரமாணத்தைக் கொண்டோ, உலக உண்மையை நிரூபிக்க விரும்பாத நையாயிகர், ''ஆன்றோர் கூறியிருக்கின்றனர்; அதனால், உலகம் உண்மை; அல்லது வேதத்தில் அங்ஙனம் கூறப்பட்டிருக்கின்றது; அதனால் உலகம் உண்மை'' என்று

கொள்ளவும் முற்படவில்லை. உலகம் உண்மை என்பதைத் தர்க்க ரீதியாக நிலைநாட்ட வேண்டுமென அவர்கள் விழைந்தனர்.

பெயர்க் காரணம்

ஓர் உண்மையைத் தர்க்க ரீதியாக நிலைநாட்ட வேண்டுமாயின், தர்க்கத் திறன் வேண்டும். சரியாகத் தர்க்கிப்பது எங்ஙனம் என்பதை அறிதல் வேண்டும். தர்க்கத்தின் முடிவு சரியாதல் வேண்டின், தர்க்கிக்கும் முறை சரியாதல் வேண்டும். இதனை நையாயிகர் உணர்ந்தது போல் வேறு யாருமே உணரவில்லை என்றுகூடக் கூறிவிடலாம். இதுதான் அவர்களுடைய சிறப்பு. தர்க்கத்தின் முடிவைவிட, தர்க்க முறைக்கே அவர்கள் முக்கியத்துவம் அளித்தனர். நியாயிப்பதால் அடையும் முடிவுகளை விட்டு, நியாயிக்கும் முறையிலே சென்றது அவர்களுடைய கவனம். இத்துறையிலே வேறு எம்மதத்தினரும் செலுத்தாத அளவு கருத்தைச் செலுத்தி, செம்மையாக நியாயிப்பது எங்ஙனம் என வரையறை செய்து, வரம்பு அமைக்க முற்பட்ட பெருமையினால்தான், நையாயிகர் என்ற சிறப்புப் பெயரும் இவர்களுக்கு ஏற்படலாயிற்று.

நையாயிகரும் அரிஸ்டோட்டலும்

இத்துறையிலே இவர்களோடு ஓரளவு ஒப்பிடத்தக்க சிறப்பு, கிரேக்க தேசத்துப் பிரபல தத்துவஞானியாகிய அரிஸ்டோட்டலுக்கு மட்டுமே உரியது. அரிஸ்டோட்டல் கூட, தமது கொள்கைகளுக்குள்ளே சிலவற்றை நையாயிகரை ஒட்டியே அமைத்துக்கொண்டார் எனக் கருதுவோரும் உளர். அக்கால இந்தியத் தார்க்கிகர்களோடு உரையாடும் வாய்ப்பை அலெக்சாண்டர் என்பவர் பெற்றிருந்தார். இந்தியக் கருத்துகள் அரிஸ்டோட்டலுக்கு எட்டியது அலெக்சாண்டர் மூலமே என்பது மேலே குறிப்பிட்டோர் கருத்து. இதற்கு நேர்மாறாக, அரிஸ்டோட்டலின் இல

மீமாம்சை - 1

வேத பிரமாணத்தையொட்டி மூன்று பிரிவினர்

வேதத்துக்குக் கொடுக்கும் இடத்தையொட்டி, இந்திய மதங்களை மூன்றாகப் பிரிக்கலாம். வேதத்தை எதிர்ப்பவை முதற்பிரிவின. இப்பிரிவுக்குச் சமணம் போன்ற மதங்களைக் குறிப்பிடலாம். இவை வேத வாக்கைப் பிரமாணமாகக் கொள்ளுவதில்லை. இரண்டாவது பிரிவு வேதத்தை ஏற்பன. ஆனால், அதே சமயம் வேதங்கள் கூறுவன உண்மை என்பதை நமது அறிவைக் கொண்டும் நிலைநாட்ட வேண்டுமென விழைவன. இந்தப் பிரிவுக்கு உதாரணமாக நியாய வைசேடிக மதங்களைக் கூறலாம். மூன்றாவது பிரிவு வேறு எந்த ஆதாரத்தையும் வேண்டாது, வேத வாக்கை ஒப்பற்ற முழுமுதற் பிரமாணமாக ஏற்பது. இப்பிரிவில் மிக முன்னணியில் நிற்பதே மீமாம்சை என்னும் மதம்.

மீமாம்சை என்ற சொல் :

மீமாம்சை என்ற பெயர் ஏற்பட்டமை சற்று வியப்பாகவேயுள்ளது. ஏனெனில், மீமாம்சை என்ற சொல்லுக்கு நேர்பொருள், முறையாக விசாரித்தல் அல்லது ஆராய்தல் என்பதாகும். அதாவது ஒன்றன் உண்மையையும் பொய்யையும் நமது அறிவைக்கொண்டு ஆராய்வது என்ற பொருளாகும். வேதம் கூறுவது எதுவும் பொய்யல்ல; வேதத்திலே கூறப்பட்ட எதையும் நமது சிற்றறிவைக்கொண்டு ஆராய வேண்டிய அவசியமில்லை எனக் கருதும் தரிசனத்துக்கு, ஆராய்தல் என்று பொருள்படும் சொல் பெயராக இடப்பட்டமை வியப்பே.

இப்பெயர் எங்ஙனம் பொருந்தும்?

இப்பொருந்தாப் பெயரிடுகைக்கு இரண்டு விதமாக விளக்கம் கூறலாம். ஒரு விதம், இப்பெயர் இம்மதத்துக்குப்

பொருந்தாது என்பதை ஏற்பது; ஏற்றுக்கொண்டு. இப்பெயர் இம்மதத்துக்குப் பொருந்தாதபோதும், இப்பெயர் இந்திய மதங்களின் பொதுவான போக்கு ஒன்றைப் புலப்படுத்துகின்றது எனக்கொள்வது. இப்பொதுப்போக்கு யாதெனில், எந்த உண்மையையும் அது வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது என்ற ஒரு காரணத்தை மட்டுமே கொண்டு ஏற்றுக் கொள்ளாது. அது நமது பகுத்தறிவுக்கும் பொருந்துகின்றது என நிரூபித்துக் காட்டுவது. வேதத்தைத் தழுவும் மதங்கள் இத்தகைய ஒரு போக்கை மேற்கொண்டமைக்கு அக்காலத்தில் பௌத்த, சமண மதங்கள் வேதத்தை எதிர்த்தமையே காரணம் என்கின்றார் டாக்டர் றண்டிலா.

மற்ற விதம், இம்மதத்துக்கு ஆராய்ச்சி அல்லது விசாரணை என்று பொருள்படும் மீமாம்சை என்ற பெயர் ஏற்பட்டமைக்குக் காரணம், அது வேதத்தில் கூறப்படுவன உண்மையா? பொய்யா? என ஆராய்கின்றது என்பது அல்ல; வேதத்திலே காணப்படும் விதிகளுக்கு நாம் கொடுக்கும் விளக்கம் சரியா? என்பதை ஆராய்வதில் பெரிதும் ஈடுபடுவதனாலேயே இம்மதத்துக்கு இப்பெயர் ஏற்படலாயிற்று என்பது.

சொல்லும் பொருளும்

வேதம் சொற்களால் ஆயது. ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பொருள் உண்டு. சொல்லுக்கும் பொருளுக்கும் என்ன சம்பந்தம்? ஒரு சொல்லுக்கு அதன் பொருள் எங்ஙனம் ஏற்பட்டது? இவற்றைச் சாதாரணமாக எவரும் சிந்திப்பதில்லை. சிந்திக்கத் தொடங்கினால் இவற்றிலுள்ள நுட்பங்களையும் வில்லங்கங்களையும் உணரலாம். உதாரணத்துக்குச் சில சொற்களை எடுப்போம். முதலில் பொருட்பெயர்ச் சொல் ஒன்றனை எடுப்போம். அச்சொல் 'மலர்' என வைத்துக்கொள்வோம். மலர் என்ற சொல் உண்டாவதற்கு முன் மலர் என்ற பொருளோ, அன்றேல் மலர் என்ற பொருள் உற்பத்தியாவதற்கு முன், மலர் என்ற சொல்லோ